மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
supeedsam.com

21.10.2022 வெள்ளிக்கிழமை

supeedsam.com

supeedsam@gmail.com


# 22 நிறைவேற்றம் சரத்வீரசேகர எதிராக வாக்களிப்பு



(வேதாந்தி)

22வது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் 178 பெரும்பான்மை வாக்குகளால் திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. சட்டமூலத்திற்கு ஆதரவாக 179 வாக்குகளும் எதிராக ஒரே ஒரு வாக்கும் பதிவாகின. பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சரத் வீரசேகர சட்டமூலத்திற்கு எதிராக வாக்களித்தார்.

அரசாங்கத்தின் 22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் மீதான விவாதம் நேற்றும் (20) இன்றும் (21) நடைபெற்றது. விவாதத்தில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் உரையாற்றியிருந்தனர்.

## உயர்தரப்பரீட்சைக்கான திகதியில் மாற்றம்

இந்த ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் நடத்தப்படும் திகதி குறித்து கல்வி அமைச்சு இன்று அறிவித்துள்ளது. அதற்கமைய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்வரும் டிசம்பர் மாதம் 18ஆம் திகதி நடத்துவதற்கும், க.பொ.த. உயர்தரப் பரீட்சையை அடுத்த வருடம் (2023) ஜனவரி 23 முதல் பெப்ரவரி 17ஆம் திகதி வரை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## 22 ஆவது திருத்தத்திற்கான உரிமை மக்கள் போராட்டத்திற்கே உரித்து

69 இலட்சம் ஜனாதிபதி ஆணையும்,68 இலட்சம் பொதுத் தேர்தல் ஆணையும் கருத்திற்கொள்ளப்படாது தன்னிச்சையான அபிப்பிராயங்களை அடிப்படையாகக் கொண்டு கடுமையான முடிவுகளை எடுத்ததன் மூலம் ஒரு மக்கள் போராட்டம் ஏற்பட்டதாகவும், இதன் விளைவாக,ஏழு மூளை இருப்பதாகச் சொன்ன நிதி அமைச்சரும்,பெரும்மன்னர் என சொன்ன பிரதமரும், ஏதோச்சதிகார ஜனாதிபதியும் அவர்களது அடிமைக் கூட்டமும் ஓடிச் சென்றதாகவும்,அதன் காரணமாகவே 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் பேசுபொருளாகி முன் வந்ததாகவும் எதிர்க்கட்சித் தலைவர் இன்று (21) பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இதன் பிரகாரம்,22 ஆவது திருத்தச் சட்டத்தின்

02

## நவம்பர் முதல் மகிந்த பிரதமர் மொட்டுக்குள் ஆலோசனை

முன்னாள்ஜனாதிபதிமஹிந்தராஜபக்ஷவுக்குமீண்டும் பிரதமர் பதவியை வழங்குவதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அந்த முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதன்படி எதிர்வரும் நவம்பர் மாதம் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவியேற்கவுள்ளதாக அந்த வட்டாரங்கள்

02



# எதைக் குறிவைத்து 22ஆவது திருத்தம் விவாதிப்பு ஜனா எம்.பி சபையில் கேள்வி



நாம் 22ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக் காணப்போவது என்ன இன நல்லிணக்கமா, மத நல்லிணக்கமா, தேசிய ஒருமைப்பாடா அல்லது பொருளாதார மேம்பாடா, இதில் எதைக் குறிவைத்து இந்த 22ஆவது திருத்தத்தை நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவித்தார். இன்றைய தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற 22வது திருத்தச் சட்டம் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு

02

## 20வது திருத்தமே நாட்டின் சீரழிவுக்கு பிரதான காரணம்



ரிஷாட் எம்.பி

நாட்டின் தற்போதைய பொருளாதார சீரழிவுக்கும் மக்கள் பசி, பட்டினியால் வாடுவதற்கும், வீதிகளில் இறங்கி அன்றாடத் தேவைகளுக்காக போராடுவதற்கும் மூல காரணம் அரசியலமைப்பின் 20 வது திருத்தம்

02



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் கொழும்பிலுள்ள தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர்எஸ்.ஈ.ஸ்கால்க் அவர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று அன்மையில் எதிர்க்கட்சித் தலைவர்அலுவலகத்தில் இடம்பெற்றது. இருதரப்பு ஒத்துழைப்பு குறித்த விரிவான கலந்துரையாடலாக இது அமைந்திருந்தது. குறிப்பாக,இலங்கைஎதிர்நோக்கும் நெருக்கடியிலிருந்து மீள்வதற்குத் தேவையான ஆதரவை வழங்குமாறு உயர்ஸ்தானிகரிடம்எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார். சமூக நல மேம்பாட்டுச் செயற்பாடுகளிலும், நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கும் எதிர்க்கட்சித் தலைவரின் போற்றத்தக்க தலையீட்டுக்குதென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் தமது பாராட்டுக்களையும் இதன் போது தெரிவித்தார்.

## பாடசாலை தவணை விடுமுறை தொடர்பில் அறிவிப்பு

எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதியுடன் இந்த ஆண்டுக்கான இரண்டாம் தவணை பாடசாலை கற்கைகள், நிறைவடையவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. டிசம்பர் 2ஆம் திகதி ஆரம்பிக்கும் இரண்டாம் தவணை விடுமுறை, 4ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.மூன்றாம் தவணையின் முதலாம் கட்டம் டிசம்பர் 5ஆம் திகதி முதல் டிசம்பர் 22ஆம் திகதி வரை இடம்பெறும் என்றும் அதன்பின்னர், டிசம்பர் 23ஆம் திகதி முதல், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிவரை நத்தார் பண்டிகைக்காக பாடசாலை விடுமுறை வழங்கப்படவுள்ளது. மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டத்துக்காக, 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி

02




## எதைக் குறிவைத்து 22ஆவது திருத்தம் விவாதிப்பு

தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த உயரிய சபையில் இன்று நமது நாட்டின் அரசியலமைப்பின் 22வது திருத்தச் சட்டத்தை விவாதித்துக் கொண்டிருக்கின்றோம். இச் சந்தர்ப்பத்தில், எனது உரையினை சில வரலாற்றுக் கண்ணோட்டங்களோடு நோக்கிப் பார்க்கலாம் என எண்ணுகிறேன். அரசியலமைப்புச் சட்டம் ஒரு நாட்டின் அதியுயர் சட்டமாகும். '**The constitution is the Supreme Law of the country**' என்பார்கள். அதிலிருந்துதான் நாட்டை ஆட்சி செய்வதற்கான அதிகாரத்தையும் வழிகாட்டலையும் ஆட்சியாளர்கள் பெறுகின்றார்கள்.

3வது திருத்தம் 6 வருடங்களுக்கு ஒரு முறை ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற விதியினை முதல் தடவையாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ஒருவர் தனது பதவிக்காலத்தின் 4 ஆண்டினை முடித்த பின்னர் அடுத்த ஜனாதிபதித் தவணைக்குத் தேர்தலை நடத்தலாம் என்பது. 4வது திருத்தம் 1977ஆம் ஆண்டு தேர்தல் முடிந்து 6 ஆண்டுகளில் அதாவது 1983ஆம் ஆண்டு கலைக்கப்பட வேண்டிய பாராளுமன்றத்தை 1989ஆம் ஆண்டுவரை நீடிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தம். 6வது திருத்தம் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களை இலக்கு வைத்து அவர்களுடைய பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை இல்லாமல் செய்வதற்காகக் கொண்டுவரப்பட்ட திருத்தம்.

13வது திருத்தம் ஆட்சியாளர்களது விருப்பத்துக்கு மாறாக பெரும்பான்மை இன பாராளுமன்ற உறுப்பினர்களது விருப்பத்துக்கு மாறாக இந்திய இலங்கை ஒப்பந்தத்தினால், பிரசவிக்கப்பட்ட குழந்தை. 18வது திருத்தம் மஹிந்தவினுடைய ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரங்களினை மேலும் வலுப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட திருத்தம். 19வது திருத்தம் நல்லாட்சி அரசாங்கம் என்று கூறப்பட்ட அரசினால், ஜனநாயகத்தை மீளக் கொண்டுவருவதற்காக கொண்டுவரப்பட்ட திருத்தம் எனக் கூறப்பட்டாலும் அதன் அடிப்படை நோக்கம் ராஜபக்ச குடும்பத்தை மையப்படுத்தி அவர்களை இலங்கை அரசியலிலிருந்து ஒழித்துக் கட்டுவதற்காகக் கொண்டுவரப்பட்ட திருத்தமே ஆகும். 20வது திருத்தம் கோட்டபாய ராஜபக்சவின் அதிகார வெறிக்கு தீனி போடுவதற்காக கொண்டுவரப்பட்ட திருத்தம்.

இங்கு உதாரணத்துக்காக எடுத்துக் காட்டப்பட்ட இந்தத் திருத்தங்களில் எந்தத் திருத்தம் நாட்டு நன்மைக்கானது எந்தத் திருத்தம் நாட்டு மக்களின் நன்மைக்கானது. எந்தத் திருத்தம் ஆறு தசாப்தங்களுக்கு மேலாக நாட்டில் புரையோடிப்போன தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வானது. இந்திய இலங்கை ஒப்பந்தப்படி அதன் நிர்ப்பந்தத்தினால் உருவான 13வது திருத்தச் சட்டத்தினை இனப்பிரச்சினை தீர்வின் தொடக்கப் புள்ளியாக வைத்து முன்நோக்கிச் செல்லலாம் என்ற எமது எண்ணத்திலும் கூட அந்தச் சட்டத்தின் உள்ளடக்கத்தினை சிதைத்துச் சின்னாபின்னப்படுத்தி வலது குறைந்த நிலைக்குத் தள்ளி எமது எண்ணத்தில் மண்ணைத் தூவினீர்கள்.

உங்களுடைய தேவைக்காக பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கான அரசியலமைப்பின் 7வது திருத்தத்தின் மூலம் இலங்கையின் 24 நிருவாக மாவட்டங்களை 25 நிருவாக மாவட்டங்களாக மாற்றினீர்கள். உங்களுடைய தேவைக்காக மாகாணங்களின் எல்லைகளைப் பிரித்து அருகிலுள்ள மாகாணங்களோடு இணைத்து தமிழர்களின் குடிப்பரம்பலைக் குறைத்து அந்தந்த மாகாணங்களில் தமிழர்களை சிறுபான்மையினராக்குவதற்காக காரியங்களைச் செய்தீர்கள். உங்களுக்குத் தேவையெனில் பிரதேச சபைகளை, பிரதேச செயலகப் பிரிவுகளை உருவாக்குவீர்கள். ஆனால், என்றோ உருவாக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கும் எம் தமிழர்களுக்கான கல்முனை வடக்கு பிரதேச செலயகத்தினை தரமுயர்த்துவதற்கு உங்களுக்கு இனவாதமொன்றைத் தவிர எந்த அரசியலமைப்பின் உறுப்புரை தடை செய்கிறது. 1881ஆம் ஆண்டுக்குப் பின்னர் அடுத்தடுத்து எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின் பரம்பலை உற்றுநோக்கும் எவரும் தமிழர்கள் தமது சொந்த மண்ணிலேயே சிறுபான்மையாக்கப்பட்ட உண்மைத் தன்மையினை மறுதலிக்க முடியாது. நீங்கள் மேற்கொண்ட அத்தனை அரசியலமைப்பு திருத்தங்களும் அந்தந்த நேரத்தில் ஆட்சி செய்த கட்சியினுடைய நலனுக்காக ஆட்சித் தலைவருடைய நலனுக்காக அவர்களுடைய குடும்பத்தினுடைய நலனுக்காக அவர்களுடைய ஆதரவாளர்களுடைய நலனுக்காக மேற்கொள்ளப்பட்டதேயொழிய நாட்டுக்காக மக்களின் நலனுக்காக மேற்கொள்ளப்பட்டவையல்ல.

இந்த நிலைமையில் நாம் 22ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக் காணப்போவது என்ன இன நல்லிணக்கமா, மத நல்லிணக்கமா, தேசிய ஒருமைப்பாடா அல்லது பொருளாதார மேம்பாடா, இதில் எதைக் குறிவைத்து இந்த 22ஆவது திருத்தத்தை நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். உலகில் ஜனநாயகத்தை மதிக்கும் ஜனநாயகத்தைப் பேணும் ஜனநாயகத்தைப் போற்றும் எந்த நாட்டிலும் எந்த ஒரு தலைவரும் மேற்கொள்ளாத அரசியலமைப்புத் திருத்தத்தங்களைச் செய்து சாதனை படைத்தவர்கள் நீங்கள். மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியும் பாராளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்ட பிரதமரும் ஒருமித்துச் செயற்பட முடியாத வரலாற்றுச் சாதனைக்குரியவர்கள் நீங்கள். தேர்தல் முடிந்ததும் வாக்களித்த மக்களுக்கு நன்றியுரையாற்றுகையில் எந்த ஒரு ஜனநாயக நாட்டின் தலைவரும் உரையாற்றாத வகையில் தனக்கு வாக்களிக்காதவர்களின் முகத்தில் காறி உமிழ்வது போல் பெரும்பான்மை மக்களின் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றவன் நான் என்று போதி மரத்தின் கீழ் நின்று உரையாற்றி மக்களது வாக்களிக்கும் ஜனநாயக உரிமையை மதிக்காது மமதை கொண்டு சாதனை படைத்தவர்கள் நீங்கள்.

பதவியேற்கும் போது இலங்கை அரசியலமைப்பைப் பேணிப்பாதுகாப்பேன் அதனை மீறாது அதன் வழி நடப்பேன் என சத்தியம் செய்து உறுதி மொழியெடுத்த நீங்கள் இலங்கை அரசியலமைப்பின் எத்தனை சரத்துக்களை மீறியுள்ளீர்கள். குறிப்பாக அரசியலமைப்பின் அங்கமான 13வது திருத்தத்தை அப்பட்டமாக மீறி, குறுக்கு வழியில் அதனைச் சின்னாபின்னப்படுத்தி இந்த அரசியலமைப்பினையே மீறிச் சாதனை படைத்தவர்கள் நீங்கள்.

டி.எஸ்.சேநாயக்கா தொடக்கம் எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஈறாக இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரை இதில் அடக்கமானவர்களே. ஆனால், நாடு கையறு நிலையில் இருந்த போது இந்த நாட்டின் ஜனநாயகப் பெருமைகளைக் காப்பாற்றுவதற்காக, பாராளுமன்றத்தின் மாண்பினைக் காப்பாற்றுவதற்காக, ஜனநாயக விரோத சட்டங்களினைத் தோலுரித்துக் காட்டுவதற்காக நடவடிக்கையெடுத்தவர்கள், தமிழர்களும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுமே என்பதனை நான் இந்த உயரிய சபையில் உரத்துப் பதிவு செய்து கொள்ள விரும்புகிறேன.

இறுதியாக நான் கூறுவது, 22வது திருத்தச் சட்டம் சம்மந்தமாக இரண்டு விடயங்களைக் கூற விரும்புகின்றேன். இதற்கு நாங்கள் வாக்களிப்பதா இல்லையா என்பதைச் சிந்திக்க வேண்டும். தற்போது எட்டு அரசியற் கைதிகளை இந்த அரசாங்கம் விடுதலை செய்கின்றது. அதனை விட இரட்டைப் பிரஜாவுரிமையை மீண்டும் கொண்டு வருவதை வெறுகின்றேன். நானும் இரட்டைப பிரஜாவுரிமை வைத்திருந்தவனே. வேண்டுமென்று நான் பிரார்த்திக்கின்றேன் என்று தெரிவித்தார்.

## நவம்பர் முதல் மகிந்த பிரதமர் மொட்டுக்குள் ஆலோசனை

மேலும் கூறுகின்றன. பசில் ராஜபக்ஷவுக்கு பிரதமர் பதவி வழங்குவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருவதாக கூறப்பட்ட போதிலும் அவ்வாறான கலந்துரையாடல் அமைச்சரவையில் இடம்பெறவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

## பாடசாலை தவணை விடுமுறை தொடர்பில் அறிவிப்பு

பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி நிறைவடையும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. பெப்ரவரி 16ஆம் திகதி முதல் பெப்ரவரி 28ஆம் திகதிவரை மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டத்துக்கான விடுமுறை வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் மூன்றாம் தவணையின் மூன்றாம் கட்டத்தை மார்ச் முதலாம் திகதி தொடக்கம், மார்ச் 21ஆம் திகதி வரை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## 22 ஆவது திருத்தத்திற்கான உரிமை மக்கள் போராட்டத்திற்கே உரித்து

பூரண உரிமைகளும் மரியாதைகளும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் உள்ளிட்ட ஒட்டு மொத்த பிரஜைகளுக்குமே வழங்கப்பட வேண்டுமென சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் இடம் பெற்ற 22 ஆவது அரசியலமைப்புத் திருத்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார். 225 பேருக்கு வரப்பிரசாதங்கள்,சலுகைகள் வழங்கப்படுவது போலவே 225 இலட்சம் மக்களுக்கும் வரப்பிரசாதங்கள்,சலுகைகள் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். 22 ஆவது திருத்தம் என்பது முழுமையான அரசியலமைப்புத் திருத்தம் இல்லையென்றாலும்,
அதன் முக்கிய காரணிகள் மீதான நம்பிக்கையினாலும், நாடு,தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து வெளிவருவதற்கு,சர்வதேச சமூகத்திற்கு இது சாதகமானதொரு நேர்மையான சமிஞ்சையைக் கொடுக்கும் என்ற உணர்வினாலும், மக்களின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டும் தான் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தி இதற்கு ஆதரவளிப்பதாகவும் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டினார்.

## 20வது திருத்தமே நாட்டின்

எனவும், சொந்த நலனை பாதுகாப்பதற்காகவே அவ்வாறான திருத்தத்தை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் கொண்டு வந்தது எனவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார். இன்றைய தினம் (21) பாராளுமன்றில் அரசியலமைப்பின் 22 ஆம் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது, "அரசியலமைப்பின் 22 வது திருத்த விவாதத்தில் பேச சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். அரசியலமைப்பின் 20 வது திருத்தம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டபொழுது எனக்கு பேச சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நான் அப்பொழுது சிறையிலிருந்து அழைத்து வரப்பட்டேன். ஏனெனில், அப்போது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் அரசாங்கம் என்மீது அநியாயமாக ஒரு குற்றத்தை சுமத்தி, என்னை சிறையில் அடைத்திருந்தது. அதாவது, வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் வாழ்ந்த மக்களை மன்னார், முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கு வாக்களிப்பதற்காக, அரச வாகனத்தில் நான் அழைத்து சென்றதாகவே அவர்களின் குற்றச்சாட்டு இருந்தது. இவ்வாறான அபாண்டமான குற்றச்சாட்டிலிருந்து நீதிமன்றம் அண்மையில் என்னை விடுவித்து நிரபராதி என தீர்ப்பளித்தது. தற்போது இந்த நாட்டில் எவருமே முதலீடுகளை செய்ய விரும்புகிறார்கள் இல்லை. இருக்கின்ற வெளிநாட்டு நிறுவனங்கள் கூட மூடிவிட்டு செல்லும் நிலையிலேயே இருக்கின்றது. எமது நாடு எதிர்காலத்தில் கைத்தொழிற் துறையில் மிகமோசமான வீழ்ச்சியை அடையும் என எதிர்வுகூறப்படுகிறது. உள்நாட்டில் உள்ள கைத்தொழிற்சாலைகளை மூடவேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளது. வரிகளை செலுத்த முடியாமல் மக்கள் திண்டாடுகின்றனர். வர்த்தகர்களில் பலர் நாட்டை விட்டுச் செல்லப் போவதாகக் கூறுகின்றனர். இந்த மோசமான நிலைக்கு கடந்தகால ஆட்சியாளர்களே காரணம். இனவாதத்தையும் மதவாதத்தையும் பரப்பி, ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் வாக்குகளைக் கொள்ளையடித்தனர். குறிப்பாக, முஸ்லிம் சமூகத்தின் மீது குறிவைத்தனர். சஹ்றான் என்ற கயவனின் குண்டுத் தாக்குதல்களை முஸ்லிம்களுடன் தொடர்புபடுத்தி, முஸ்லிம் சமூகத்தை பாடாய்ப்படுத்தினர். என்றார்



நிதியுதவி
NH INVESTMENT & SECURITIES

அருந்ததி
இணைய திருமண சேவை

Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

## மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**22312 | வே | 1985**
யாழ்நகர் | இந்து | MSc
Software Engineer
சதயம் (கும்பம்) | USA
174 செ.மீ | செவ்: 12

**22888 | வே | 1995**
பருத்தித்துறை | இந்து
BSc | IT Engineer
திருவாதிரை (மிதுனம்)
183 செ.மீ | செவ்: 01

**25018 | வே | 1988**
வல்வெட்டித்துறை | இந்து | BD
Cutomer Service Officer
சதயம் (கும்பம்) | UK
170 செ.மீ | செவ்: 08

**22498 | வே | 1992**
காரைநகர் | இந்து | BCom,
AAT | Asst. Accountant
திருவோணம் (மகரம்)
175 செ.மீ | செவ்: 08

**22510 | வே | 1990**
நெல்லியடி | இந்து | BBA,
CIMA | Audit Manager
விசாகம் (விருச்சிகம்)
167 செ.மீ | UAE

**22462 | வே | 1992**
வளலை | இந்து | BD,
HND | Civil Engineer
திருவோணம் (மகரம்)
173 செ.மீ

**22921 | வே | 1995**
கொக்குவில் | இந்து | BSc
Civil Engineer
திருவோணம் (மகரம்)
172 செ.மீ

**25015 | வே | 1987**
நயினாதீவு | இந்து | BD
Supervisor | கனடா
சுவாதி (துலாம்)
167 செ.மீ

**22939 | ந | 1995**
அச்சுவேலி | இந்து | A/L
Restaurant Staff
பூராடம் (தனுசு) | France
168 செ.மீ

**22131 | வே | 1990**
கரனைவாய் | இந்து | BSc
MSc | Civil Engineer
மகம் (சிம்மம்) | Singapore
168 செ.மீ

**22549 | வே | 1988**
காரைநகர் | இந்து | B.Eng
Mechanical Engineer
கார்த்திகை (ரிஷபம்)
165 செ.மீ

**25000 | வே | 1991**
கோப்பாய் | இந்து | Master
Degree | Banker
சித்திரை (கன்னி)
180 செ.மீ | சூ.செவ்: 06

**22230 | வே | 1988**
கொக்குவில் | இந்து
Diploma | Receptionist
சுவாதி (துலாம்) | France
167 செ.மீ | செவ்: 02

**22224 | வே | 1988**
திருநெல்வேலி | இந்து | BSc
Exe.Mechanical Engineer
கேட்டை (விருச்சிகம்)
170 செ.மீ | Singapore

**22318 | வே | 1991**
நல்லூர் | இந்து | A/L
Management Assistant
சித்திரை (துலாம்) | Divorced
160 செ.மீ | செவ்: 12

**22179 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | HNDM
Reagional Manager
உத்தராடம் (தனுசு)
192 செ.மீ | செவ்: 04

**22095 | வே | 1986**
இணுவில் | இந்து | A/L
Chef | France
சுவாதி (துலாம்)
183 செ.மீ

**22068 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | BSc
Software Engineer
மகம் (சிம்மம்)
180 செ.மீ | செவ்: 04

**22993 | வே | 1995**
கொக்குவில் | இந்து
BSc | Engineer
கார்த்திகை (ரிஷபம்)
177 செ.மீ

**22146 | வே | 1993**
வேலணை | இந்து
BSc | Lecturer
பூரட்டாதி (கும்பம்)
165 செ.மீ | செவ்: 04

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**23071 | வே | 1985**
மானிப்பாய் | இந்து
MBBS | Doctor
அஸ்வினி (மேடம்)
164 செ.மீ | சூ.செவ்: 05

**24943 | வே | 1993**
தெல்லிப்பழை | இந்து
Diploma | Teacher
சதயம் (கும்பம்)
160 செ.மீ | சூ.செவ்: 11

**22609 | கோ | 1996**
பருத்தித்துறை | இந்து
Diploma | Teacher
புனர்பூசம் (மிதுனம்)
167 செ.மீ | செவ்: 12

**25006 | இ.வே | 1993**
அளவெட்டி | இந்து
BSc | Nurse | UK
உத்தரட்டாதி (மீனம்)
158 செ.மீ

**22495 | வே | 1996**
மானிப்பாய் | இந்து | A/L
Accountant
உத்தரம் (கன்னி)
165 செ.மீ | செவ்: 08

**22792 | வே | 1993**
அச்சுவேலி | இந்து | BSc
Demonstrator
கேட்டை (விருச்சிகம்)
160 செ.மீ | செவ்: 02

**23158 | வே | 1995**
வட்டுக்கோட்டை | இந்து
BBS Congras | சுவிஸ்
விசாகம் (துலாம்)
167 செ.மீ | சூ.செவ்: 03

**22789 | வே | 1994**
கொக்குவில் | இந்து | BSc
Operation Analyst
பூசம் (கடகம்)
159 செ.மீ

**22513 | வே | 1994**
மானிப்பாய் | இந்து | BD
Marketing Executive
திருவாதிரை (மிதுனம்)
170 செ.மீ

**23086 | வே | 1996**
சண்டிலிப்பாய் | இந்து | BBA,
ACCA | Lecturer
விசாகம் (துலாம்)
170 செ.மீ

**22537 | வே | 1995**
கொக்குவில் | இந்து | BSc
Software Engineer
ரேவதி (மீனம்)
165 செ.மீ

**22474 | வே | 1997**
வவுனியா | இந்து
BSc | QA Engineer
பரணி (மேடம்)
167 செ.மீ | செவ்: 02

**25012 | வே | 1990**
நல்லூர் | இந்து | BSc
Finance Officer
திருவாதிரை (மிதுனம்)
158 செ.மீ | செவ்: 07

**22696 | வே | 1996**
சித்தங்கேணி | இந்து | BSc
Software Engineer
திருவோணம் (மகரம்)
176 செ.மீ | சூ.செவ்: 05

**22441 | வே | 1996**
திருநெல்வேலி | இந்து | HRM
PG Diploma (Final Year)
Staff Assistant | சித்திரை
(கன்னி) | 157 செ.மீ

**22158 | வே | 1993**
அல்வை | இந்து
MBBS | Doctor
திருவாதிரை (மிதுனம்)
163 செ.மீ

**22891 | வே | 1993**
ஆனைக்கோட்டை | இந்து
Diploma | Bank
Assistant | மூலம் (தனுசு)
159 செ.மீ

**22936 | வே | 1993**
அளவெட்டி | இந்து
BBM | Teacher
மகம் (சிம்மம்)
151 செ.மீ | செவ்: 07

**22870 | வே | 1993**
ஏழாலை | இந்து | BSc,
PhD | Researcher
மூலம் (தனுசு) | Australia
157 செ.மீ | சூ.செவ்: 10

**22660 | கோ | 1994**
அச்சுவேலி | இந்து
BFA | Job Seeker
மூலம் (தனுசு)
159 செ.மீ | சூ.செவ்: 12

# இலங்கையின் மூத்த எழுத்தாளரான சந்தனசாமி ஜோசப் காலமானார்



இலங்கையின் மூத்த எழுத்தாளர் , நாவலாசிரியர், இலக்கிய ஆய்வாளர் சாஹித்ய ரத்னா தெளிவத்தை ஜோசப் (சந்தனசாமி ஜோசப்) தமது 88 ஆவது வயதில் காலமானார். இதனை அவரின் குடும்பத்தினர் உறுதிப்படுத்தியுள்ளனர். 1960களில் எழுத ஆரம்பித்து எழுபதுகளில் இலக்கிய உலகில் தனித்துவம் மிகுந்த படைப்பாளியாக அவர் திகழ்ந்தார். சந்தனசாமி ஜோசப், 1934 ஆம் ஆண்டு பெப்ரவரி 16ஆம் திகதி இலங்கையின் மலையகத்தில், பதுளை மாவட்டம், ஹாலி–எல நகருக்கு அருகில் உள்ள ஊவாக்கட்டவளை என்ற ஊரில் பிறந்தார்.

தெளிவத்தை ஜோசப் தமிழ்நாட்டில் கும்பகோணத்தின் உயர்நிலைப் பள்ளியில் கற்றதன் பின்னர், இலங்கை திரும்பி பதுளை சென் பீட்டர்ஸ் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார். இவர் ஆரம்பத்தில் தெளிவத்தை என்னும் தோட்டத்தில் ஆசிரியராக இருந்தவர். இதன் காரணமாகவே தனது பெயருடன் தெளிவத்தையையும் இணைத்துக் கொண்டார். தமது படைப்புக்களுக்காக அவருக்கு சாகித்திய விருது, விஷ்ணுபுரம் இலக்கிய விருது (2013) சாகித்திய ரத்னா (2014) போன்ற விருதுகள் கிடைத்துள்ளன. காலங்கள் சாவதில்லை என்பது இவருடைய முக்கியமான நாவலாகும். நாமிருக்கும் நாடே சிறுகதைத் தொகுதிக்காக இலங்கைச் சாகித்திய விருது அவருக்கு கிடைத்தது. இவரது குடை நிழல் என்ற புதின நூல், 2010 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாண இலக்கிய வட்டம் – இலங்கை இலக்கியப் பேரவையின் விருதைப் பெற்றார்.

# விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைப்பு




(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

பிரதேச செயலக ரீதியாக நிறுவப்பட்டுள்ள விளையாட்டு குழுக்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றுள்ளது. விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் கடந்த வருடம் சகல மாவட்டங்களிலும் உள்ள பிரதேச செயலக பிரிவுகள் ரீதியாக 21 வயதுக்குட்பட்ட விளையாட்டு வீர வீராங்கனைகளில் திறனை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ஒவ்வெரு பிரதேச செயலக பிரிவுகளிலும் தனித்துவம் வாய்ந்த விளையாட்டு குழுவினை நிறுவதற்கான செயற்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அந்தவகையில் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளிலும் விளையாட்டு குழுக்கள் நிறுவப்பட்டு அதற்கான பயிற்றுவிப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டு விளையாட்டு குழுக்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (விளையாட்டு) திருமதி. நவரூபரஞ்ஜினி முகுந்தன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் விளையாட்டுத்துறையுடன் சம்பந்தப்பட்ட வீர வீராங்கனைகளை வலுப்படுத்தும் வகையில் இந்த செயல்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், மாவட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தி வரும் வீர வீராங்கனைகளின் திறமைகளை மேலும் மேம்படுத்தும் வகையில் அவர்களை வலுப்படுத்தி தேசிய மட்டத்திற்கு கொண்டு சென்று தேசிய மட்டத்தில் சாதனை புரிவதற்கு ஏற்றவகையில் இந்த பயிற்றுவிப்புக்கான முன் நடவடிக்கையாக குறித்த விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், இதன் போது மாவட்ட செயலக கிரிக்கட் அணியில் விளையாடும் வீரர்களுக்கான சீருடையும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் வி.ஈஸ்வரனின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், குறித்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சனி ஸ்ரீகாந்த், மாவட்ட செயலக விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலகங்களின் விளையாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் என துறைசார் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

# மட்டக்களப்பு குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் தின விழா



(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டம் குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் தின நிகழ்வு வியாழக்கிழமை(20) மேற்படி வித்தியாலயத்தில் மிகவும் சிறப்பு நடைபெற்றது. இதன்போது அதிபர், ஆசிரியர்களுக்க மாணவர்கள் மலர் மாலை அணிவித்து அணிநடை மரியாதையுடன் வரவேற்கப்பட்டனர். வித்தியாலய அதிபர் வே. யாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் பங்கேற்றிருந்தனர்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் குருக்கள்மடம் விளையாட்டு கழகம், சங்கங்கள், பொதுநல அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் இடம்பெற்ற இந்நிகழ்வில், வரவேற்பு நடனம், ஆசிரியர் கீதம் இசைக்கப்பட்டு, ஆசிரியர்களின் நடனம், பாடல் இன்னும் பல ஆசிரியர்களுக்கான போட்டி நிகழ்வுகள் எனப்பல நிகழ்வுகள் இடம்பெற்றன.

# காயத்ரி சித்தர் ஸ்ரீ முருகேசு சுவாமியின் 89 ஆவது ஜன தின வைபவம்

தலவாக்கலை பி.கேதீஸ்

நுவரெலியா இலங்காதீஸ்வரர் ஆலய காயத்ரி பீடத்தின் ஸ்தாபகரும் காயத்ரி சித்தருமான ஸ்ரீ முருகேசு சுவாமியின் 89 ஆவது வருட ஜனன தின குரு ஜயந்தி விழா பூஜை நிகழ்வுகள் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை நுவரெலியா ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலய காயத்ரி பீடத்தில் பக்தி பூர்வமாக நடைபெறும். அன்றைய தினம் காலை ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயத்தில் விஷேட அபிஷேக அலங்காரப் பூஜைகள் நடைபெற்று திருவுருவச்சிலை குரு பீடத்திற்கு ஊர்வலமாக எடுத்து வரப்படும். அதனை தொடர்ந்து காயத்ரி பூஜை, மகாம்ருத்யுஞ்ஜெய ஹோமம்,குரு நல்லாசிப் பிரார்த்தனை மற்றும் அருளுபதேசம் என்பன நடைபெறவுள்ளதோடு மெய்யடியார்களுக்கு அன்னதானமும் வழங்க விஷேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் பிற்பகல் 2 மணிக்கு காயத்ரி சித்தர் ஸ்ரீ முருகேசு மஹாரிஷி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது. இப் பூஜை நிகழ்வுகளில் கலந்து கொண்டு சற்குரு தேவர் காயத்ரி சித்தர் ஸ்ரீமுருகேசு சுவாமிகளின்



அருட் கடாட்சத்தினையும், அன்னை ஸ்ரீ காயத்ரி தேவி,மற்றும் ஸ்ரீ இலங்காதீஸ்வரப் பெருமானின் பரிபூரண அருளையும் பெறுமாறு ஆலய தர்மகர்த்தா சக்திவேல் சந்திரமோகன் கேட்டுக்கொள்கின்றார்.

# விவேகா பழைய மாணவர் சங்கம் நடாத்தும் மாபெரும் இரத்ததான முகாம்

கல்லடி – உப்போடை, விவேகானந்தா மகளிர் கல்லூரியின் விவேகா பழைய மாணவர் சங்கம் நடாத்தும் மாபெரும் இரத்ததான முகாம் எதிர்வரும் சனிக்கிழமை 22.10.2022 திகதி காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. "உதிரம் கொடுப்போம், உயிரைக் காப்போம்" எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு, கல்லடி – உப்போடை, விவேகானந்தா மகளிர் கல்லூரியின் நடராஜானந்தா மண்டபத்தில் இடம்பெறவுள்ள இரத்ததான முகாமிற்கு பழைய மாணவர்கள், பாடசாலை நலன்விரும்பிகள் மற்றும் இரத்ததான நிகழ்வில் பங்கேற்று இரத்ததானம் வழங்க ஆர்வமுள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர், ஏற்பாட்டுக்குழுவினருடன் இணைந்து அனுசரனை வழங்கும் **2021 Batch** பழைய மாணவர்கள். இதன்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்குப் பொறுப்பான வைத்தியர்கள் மற்றும் தாதிகள் குழாம் இரத்த சேகரிப்பில் செயற்படவுள்ளனர்.

இவ்விரத்ததான முகாமினூடாக பாடசாலை, பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை சமுகத்திற்குமிடையேயான தொடர்புகள் மேம்பட வாய்ப்புகள் அமையலாமென பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது.


# தொற்றா நோய்கள் சம்பந்தமான விழிப்புணர்வு

நூருல் /ஹுதா உமர்

உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் செயற்படுத்தப்படும் **PSSP** செயற்றிட்டத்தின் கீழ் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் தெரிவு செய்யப்பட்ட கோமாரி ,உல்லே ஆகிய பிரதேச மக்களுக்கு தொற்றா நோய்கள் சம்பந்தமான பரிசோதனைகளை முன்கூட்டியே மேற்கொண்டு நோய்களை தடுப்பதற்கான கருத்திட்டத்தின் ஒரு பகுதியாக பொத்துவில் பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கமைய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சி.எம். மாஹிர் அவர்களினால் இணைப்புச் செய்யப்பட்டு இன்று விரிவுரையும் நடாத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்களும், கிராம அலுவலர்களும், பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரியும், கோமாரி மற்றும் உல்லே ஆரம்ப சுகாதார பராமரிப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரிகளும், திட்டமிடல் கிளையின் **PSSP** நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தரான ஏ.றஸ்ஸாலிம் மற்றும் பாசித் முகைதீன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# வெளிநாட்டு பறவை இனங்கள் அம்பாறை மாவட்டத்தில் சஞ்சரிப்பு



பாறுக் ஷிஹான்

காலநிலை மாற்றத்தின் காரணமாக வெளிநாட்டு பறவை இனங்கள் தற்போது அம்பாறை மாவட்டத்தில் சஞ்சரிப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. பெரிய நீலாவணை சம்மாந்துறை நாவிதன்வெளி நிந்தவூர் ஆகிய பிரதேசங்களில் உள்ள நீர் நிலைகளை நாடி இந்த வெளிநாட்டு பறவை இனங்கள் வருகை தருகின்றன.

இதனால் வெளிநாட்டிலிருந்து வரும் குறித்த பறவையினங்களை இரசிப்பதற்காக பலரும் குறித்த இடத்திற்கு வருவதோடு அங்கு புகைப்படம் எடுப்பதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர் இம் மாதக் கடைசியில் பல நாட்டுப் பறவைகளும் இங்கு வந்து தங்குகின்றன. இங்கு வரும் வெளிநாட்டு பறவைகள் ஜனவரி பெப்ரவரி மாதம் கூடு கட்ட துவங்கும். மேற்குறித்த பறவைகள் 3000 மைல் தூரம் பறந்து செல்லும் வல்லமை படைத்தவை. ஆஸ்திரேலியா , சுவிட்சர்லாந்து, ரஷ ்யா, ஜெர்மனி, பிலிப்பைன்ஸ், , சைபிரியா ஆகிய நாடுகளிலிருந்து பறவைகள் இங்கு வருகின்றன. வலசை வந்து ஏப்ரல் மே ஜ•ன் ஜ•லை மாதம் வரை தங்கி குஞ்சு பொரித்து பிறகு அவற்றுடன் பறந்து செல்கின்றன. 23 க்கும் மேற்பட்ட பறவைகள் இங்கு வந்து கூடு கட்டுவதாக அப்பகுதி மக்கள் குறிப்பிட்டனர். இதில் நாரை இனங்கள் அன்னப்பறவை உள்ளிட்ட வலசை பறவையினங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வான்கதவுகள் 4 திறப்பு



தலவாக்கலை பி.கேதீஸ்

மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகளை திறப்பதற்கு நீர்த்தேக்க பொறியியலாளர்கள் நேற்று (21) நடவடிக்கை எடுத்தனர். மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீரேந்தும் பகுதிகளில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக நீர்த்தேக்கத்தின் ஐந்து வான்கதவுகளில் நான்கு வான்கதவுகள் நேற்று திறக்கப்பட்டன. மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையினால் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் கீழ் பகுதியில் கொத்மலை ஓயாவை அண்மித்து வாழும் குடியிருப்பாளர்களை மிக அவதானமாக இருக்குமாறு நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அழககோன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# கல்முனை சந்தான்கேணி பொது மைதானம் செப்பனிடும் பணிகள் ஆரம்பம்



**பாறுக் ஷிஹான்**

கல்முனை சந்தான்கேணி பொது மைதானம் செப்பனிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கல்முனை விக்டோறியஸ் விளையாட்டு கழகத்தின் வேண்டுகோளை ஏற்று இன்று கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.ம்.றகீப் பொது மைதானத்தை செப்பனிடும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார். கடந்த சில தினங்களுக்கு முன்னர் சமூக ஊடகங்களில் குறித்த மைதானத்தின் நிலைமை தொடர்பில் ஆர்வலர்களால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதனை தொடர்ந்து கல்முனை விக்டோறியஸ் விளையாட்டுக்கழக தவிசாளர் ஏ.எம் றியாஸ் மைதானம் தொடர்பில் முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தார். இதற்கமைய குறித்த மைதானத்தில் காடுமண்டியிருந்த பகுதிகள் இனங்காணப்பட்டு கனரக(பெக்கோ) வாகனம் மூலம் அகற்றப்பட்டு செப்பனிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை கல்முனை விக்டோறியஸ் விளையாட்டுக்கழக தவிசாளர் ஏ.எம் றியாஸ் ,கல்முனை விக்டோறியஸ் விளையாட்டு கழக தலைவர் ஏ.டபிள்யூ.எம் ஜெஸ்மீன் ,பொதுச்செயலாளர் ஏ.ஜே.சமீம் செப்பநிடப்பட்டு வருகின்ற மைதானத்தை ஸ்தலத்திற்கு சென்று பார்வையிட்டதுடன் குறித்த கோரிக்கையினை ஏற்று துரித நடவடிக்கை மேற்கொண்ட மாநகர முதல்வர் உட்பட கல்முனை மாநகர சபை பொறியியலாளர் எம் . ஜௌஸி ஆகியோருக்கு நன்றிகளை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கல்முனை விக்டோறியஸ் விளையாட்டு கழகமானது 2023 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபையை தெரிவு செய்து செயற்பட்டு வருவதுடன் சுமார் 35 வருடங்களுக்கு மேலாக இப்பிராந்தியத்தில் செயற்பட்டு கழகத்தில் பல்லின மக்கள் உள்வாங்கப்பட்டு இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# செங்கதிரோனின் சமம் நூல் வெளியீடு

செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணனின் சமம்(உருவகக் கதைகள்) நூல் வெளியீடு 29.10.2022 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பொத்துவில் கலாசார மண்டபத்தில் ஓய்வுநிலை அதிபரும், கவிஞருமான எஸ். பி.நாதன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. முன்னிலை அதிதியாகக் கிழக்கு மாகாணப் பண பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி.சரண்யா சுதர்ஷன் அவர்களும் முதன்மை அதிதிகளாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீஸ ன், பேராசிரியர் றமீஸ்அப்துல்லா (மொழித்துறை, தென்கிழக்குப்பல்கலைக்கழகம்), பேராசிரியர் செ.குணபாலன் (முகாமைத துவத்துறை, தென்கிழக்குப்பல்கலைக்கழகம்) ஆகியோரும் சிறப்பு அதிதிகளாக காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன், கல்முனை வடக்குப் பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் , திருக்கோவில் வலயக்கல்விப் பணிப்பாளர் யோ.ஜெயச்சந்திரன், நாவலாசிரியர் தீரன் ஆர். எம்.நௌசாத , கலாநிதி சு.சிவரெத்தினம் (தலைவர், கட்புல தொழிநுட்பக் கலைத்துறை, சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், மட்டக்களப்பு), சட்டத்தரணி சபாபதி பரஞ்சோதி, ஓய்வுநிலை தபாலதிபர் க.கந்தசாமி, ஓய்வுநிலை அதிபர் மு.முகம்மது கெஷரீப் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை தொழிலதிபர் கனகரட்ணம் ரகுலோஜன் பெற றுக்கொள்ள, வெளியீட்டுரையை மட்டக்களப்பு 'செங்கதிர்' இலக்கியவட்டத் தலைவர் கவிஞர் அன்பழகன் குரூஸ்ம் நூல நோக்கு உரைகளை போரதீவுப்பற்று உதவிப் பிரதேச செயலாளர் வி.துலாஞ்சனன் மற றும் தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் எம்.அப்துல்ரஸாக் ஆகியோரும் ஆற்றவுள்ள இந்நிகழ்வின் ஆரம்பத தில் தமிழ்மொழி வாழ்த்தைத் தொடர்ந்து மகளிர், சிறுவர் மற றும் சமூக வலுப்படுத் துகை அமைச்சின் வளவாளர் க.திலகேஸ்வரத்தின் வரவேற்புரையும், நடன ஆசிரியை செல்வி வசந்தராசா வசந்றோவினியின் நெறியாள்கையின் கீழ் பொத்துவில் மெதடிஸ்த தமிழ் மகா வித்தியாலய தரம் 10 மாணவிகளின் வரவேற்பு நடனமும் இடம்பெறும்.

'கவிஞர் யுவன் அரங்கு' எனப் பெயர்சூட்டப் பெற்றுள்ள இந்நிகழ்வின் அரங்க அறிமுகத்தில் மறைந்த கவிஞர் யுவன் பற்றி பொறியியலாளர் ஏ.எம்.எம்.தாரீக்அசீஸ் உரையாற்றவுள்ளார். நூலாசிரியர் செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணனின் ஏற்புரையுடன் நிகழ்வுகள் நிறைவுபெறும்.

# துரித உணவு உற்பத்தி திட்டத்தின் கீழ் தானிய பயிர்கள் நிந்தவூரில் வழங்கி வைப்பு



**( காரைதீவு சகா)**

சமகால பொருளாதார நெருக்கடி தீர்வாக அரசினால் முன்வைக்கப்பட்ட துரித உணவு உற்பத்தி திட்டம் தீவிரமாக நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த உணவு உற்பத்தி திட்டத்தின் கீழ் நிந்தவூர் விவசாய போதனாசிரியர் பிரிவில் வீட்டு தோட்டத்தில் பயிரிடப்படும் தானிய பயிர்களான சோளன் பயறு கௌபி நிலக்கடலை குரக்கன் போன்ற விதைகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வு நிந்தவூர் விவசாய போதனாசிரியர் திருமதி சஜிகலா ரகுநந்தன் தலைமையில் நடைபெற்றது.

தொழில்நுட்ப உதவியாளர் எம் எம் ஏ நவாத் நெறிப்படுத்திய இந்த நிகழ்வில் அக்கரைப்பற்று வலய உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி அழகுமலர் ரவீந்திரன் வலய பாடவிதான உத்தியோகத்தர் எம். கோகுல்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான விளக்கம் வழங்கப்பட்டன. மேலும் தானிய பயிர்களின் நடுகைமுறை பசளையிடல் நோய் பீடை பரிபாலனம் அறுவடை முறை பற்றி விவசாய போதனாசிரியரால் பூரண விளக்கம் வழங்கப்பட்டது.

# 30 இலட்சம் நிதியில் நிர்மானிக்கப்பட்ட முன்பள்ளி புதிய கட்டிடம் திறப்பு



**பைஷல் இஸ்மாயில் -**

குச்சவெளி பிரதேச சபையினால் சுமார் 3 மில்லியன் நிதியொதுக்கீட்டில் நிலாவெளி – கோபாலபுரத்தில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட முன்பள்ளி பாடசாலையின் புதிய கட்டிடத்தை குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக் திறந்து வைத்தார். குச்சவெளி பிரதேச சபையின் நிலாவெளி வட்டார உறுப்பினர் ஜெ.நிமலகாசனின் முன்மொழிவுக்கமைய இந்த முன்பள்ளி பாலர் பாடசாலைக்கான நிர்மானப் பணிகள் தவிசாளரினால் முன்னெடுக்கப்பட்டு (19) திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது தவிசாளர் ஏ.முபாறக் உரையாற்றுகையில், ஆரம்பக் கல்வியைத் தொடர்வதற்கு சிறந்த சூழலும், அதற்கான வசதிகளும் இருக்க வேண்டும். அதற்கு இந்தக் கட்டிடம் சிறந்த உதாரணமாக அமையும். ஊர்மக்கள் தங்களது பிரச்சனைகளை உங்கள் வட்டார உறுப்பினர் ஊடக தெரியப்படுத்தி உரிய தீர்வை பெற்றுக்கொள்ள அவருடன் ஒத்துழைத்து உங்கள் பயணத்தை மேற்கொள்ள வேண்டும். அதேபோன்று பாலர் பாடசாலையின் பெற்றோர்கள், முன்பள்ளி ஆசிரியையுடன் பூரணமாக ஒத்துழைப்பு வழங்கி மாணவர்களின் கல்வி சார்ந்த மற்றும் இதர விடயங்களில் பங்கேற்று ஆரோக்கியமான அறிவார்ந்த சமூகத்தை கட்டியெழுப்ப முன்நிற்க வேண்டும் என்றும் தவிசாளர் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் நிலாவெளி பொது நூலகத்தை இலத்திரனியல் நூ லகமாக (**E-Laibare**) மிக விரைவில் மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதற்கான சகல முயற்சிகளையும் முன்னெடுத்து வருகின்றேன் என்றார். பிரதேச சபையின் செயலாளர் (திருமதி) மாலினி அசோக்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த திறப்பு விழாவுக்கு குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக் பிரதம அதியாகவும், கௌரவ அதிதிகளாக உப தவிசாளர் எஸ்.எம்.சாஜித், ஜீ.ஏ.பழில் அமீன், பி.வைத்தியலிங்கம், ஜெ.நிமலகாசன், நிலாவெளி உப அலுவலக பொறுப்பதிகாரி மற்றும் புல்மோட்டை உப அலுவலகங்களின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட முன்பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கணித போட்டியில் புனித மிக்கேல் கல்லூரி மாணவன் சாதனை



அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட சிதம்பரா கணித போட்டியிலே தரம் 5 மாணவர்களுக்கிடையிலான போட்டியில் அகில இலங்கையில் அதிகூடிய புள்ளியினைப்பெற்று முதலாம் இடத்தினை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மாணவன் செல்வன் ரவீந்திரன் டிலுஷாந்த் பெற்று சாதனையாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் வல்வெட்டித்துறை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற்ற மாபெரும் கணிதப்போட்டி விருது வழங்கும் விழாவில் தங்க பதக்கமும் பணப்பரிசிலும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். தரம் 4 தொடக்கம் தரம் 9 வரையிலான மாணவர்களில் அதிகூடிய புள்ளியினை பெற்று முதல் இடத்தினை பெற்ற 6 மாணவர்களும் அடுத்த வருடம் இங்கிலாந்து நாட்டுக்கு கல்வி சுற்றுலாவுக்காக அனுப்பப்படுவார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.




# துப்பாக்கியொன்று விசேட அதிரடிப்படையினரால் மீட்பு

**க.ருத்திரன்**



வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள 5 ஆம் வட்டார கிராமத்தில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கொன்றினை விசேட அதிரடிப் படையினர் மீட்டுள்ளனர். வாகரை பிரதேச இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து விசேட அதிரடிப்படையினரின் கவனத்திற்கு தெரியப்படுத்தியதனை அடுத்து குறித்த வீட்டிற்கு சென்ற அதிரப்படையினர் அதனை மீட்டுள்ளதுடன் சந்தேக நபரை கைது செய்து வாகரை பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர். சம்பவம் தொடர்பாக பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சந்தேக நபர் மற்றும் கட்டுத்துவக்கினை வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்

நாள்தோறும் சுபீட்சம் நிகழ்நிலை
பத்திரிகையை பார்வையிட
www.supeedsam.com

# மயில்தங்கியமலை நந்தீச்சரர் திருக்கோயிலில் செந்தமிழாகம முறையில் 108 சங்குத்திரு நீராட்டு விழா







**ந.குகதர்சன்**

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஈரளக்குளம், வாத்திரவெட்டை, மயில்தங்கிய மலை அருள்மிகு ஆதிபரமேசுவரி உடனுறை நந்தீச்சரர் திருக்கோயிலில் 108 சங்குத்திரு நீராட்டுவிழாவும், மகாயாகமும் செந்தமிழ் ஆகம முறையில் இடம்பெற்றது. பூசைகள் யாவும் ஆலயத்தின் செந்தமிழ் ஆகம அருட்சுனைஞர் சிவத்திரு. தனியொளி சிவம் ஜீவரெத்தினம் தயாளன் ஐயா தலைமையில்செந்தமிழ் ஆகம அருட்சுனைஞர் சிவத்திரு அபிரொளி சிவம் வேலாயுதம்பிள்ளை பிரபாகரன் ஐயா, செந்தமிழ் ஆகம அருட்சுனைஞர் உயிரொளி சிவம் சிவத்திரு. இரத்தினராஜா சுஜிந்த் ஐயா, செந்தமிழ் ஆகம அருட்சுனைஞர் சிவத்திருலோகநாதன் வரதன் ஐயா, செந்தமிழ் ஆகம அருட்சுனைஞர் சிவத்திரு. வேல்முருகு ஜெயரூபன் ஐயா ஆகியோரால் சிறப்பாக நடத்தப்பட்டது.

இந்நிகழ்வுகளைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட சிவத்தொண்டர் திருக் கூடத்தினரால் பக்த அடியார்களுக்கு உருத்திராக்கம் அணிவிக்கப்பட்டதுடன் மட்டக்களப்பு ஆனந்தகிரி அறப்பணி சபையினால் ஆலயத்திலும், ஆலய வளாகத்தை சுற்றியும், சுற்றுப்புறச் சூழலிலும் கற்பகவிருட்சம் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டது. பூசையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இருந்து பக்த அடியார்கள் கலந்து கொண்டிருந்தமை விசேட அம்சமாகும். இவ்ஆலயம் மட்டக்களப்பு மாவட்டத்தில் செந்தமிழ் ஆகம முறையில் பூசை நடைபெறும் சிறப்பு வாய்ந்த புகழ் பெற்ற ஆலயம் என்பது குறிப்பிடத்தக்கது.

# கரைவலைப்பாடுகள் மற்றும் துறைகள் ஜிபிஎஸ் மூலம் அளவீடு செய்ய திட்டம்

**( வாஸ் கூஞ்ஞ)**

நாடு முழுவதிலுமுள்ள கரைவலைப் பாடுகள் மற்றும் துறைகளை முறையாக ஒழுங்கு முறைப்படுத்துவதற்கு 1996ஆம் ஆண்டில் 02 ஆம் இலக்கமுடைய கடற்தொழில் மற்றும் நீரியல் வளங்கள் ஒழுங்கு விதிகளின் கீழ் பிரிசுரிக்கப்பட்ட 337–48ஆம் இலக்க 1985.02.21 ஆந் திகிதியிடப்பட்ட அதி விஷேட வர்த்தமானியின் பிரகாரம் 1984இல் கரைவலை மீன்பிடி ஒழுங்கு விதிகள் திருத்தப்பட்டு புதிய ஒழுங்குவிதிக் கோவை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய நாடு முழுவதிலும் செயற்படுத்தப்படும் சகல கரைவலை பாடுகள் மற்றும் துறைகள் ஜிபிஎஸ் தொகுதி மூலம் எல்லை நிர்ணயிக்கப்பட்டு கரைவலை ஒழுங்கு விதிகள் திருத்தும்போது அதில் நடள்ளடக்கப்படல் வேண்டும் எனவும்

இந்த அளவீட்டு நடவடிக்கை நில அளவைத் திணைக்களத்தின் மூலம்மேற்கொள்வதற்குஇணக்கம்காணப்பட்டுள்ளதால்இந்தவிடயத்துக்கு முன்னுரிமை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. கரைவலை துறைகளின் அளவீட்டு நடவடிக்கைக்கு நில அளவைத் திணைக்களத்துக்கு ஏற்படும் செலவினம் அகில இலங்கை கரைவலை உரிமையாளர்களின் மீனவ கூட்டுறவுச் சங்கத்தினால் சம்பந்தப்பட்ட உரிமையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய இந்த அளவீட்டு நடவடிக்கைக்கான செலவினம் சம்பந்தப்பட்ட கரைவலைப்பாட்டின் உரிமையாளர்களினால் செலவிடப்படல் வேண்டும் என்றும் இது சம்பந்தமாக ரூபா 27 ஆயிரம் உதவித் தொகையின் கீழ் ஒரு கரைவலை பாட்டின் அளவீட்டு நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என நில அளவைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கு கரைவலை பாடுகள் அமைந்துள்ள பிரதேசத்தின் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளரினால் அளவீட்டுக்கான விண்ணப்பம் நில அளவைத் திணைக்களத்துக்கு அனுப்புதல் வேண்டும். அத்துடன் தேவையான செலவினம் கரைவலை பாட்டின் உரிமையாளரினால் இத் திணைக்களத்துக்கு செலுத்தி அளவீட்டு நடவடிக்கையை மேற்கொள்ள முடியும். இந்த அளவீட்டு நடவடிக்கையை விசேட விடயமாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதால் இந்த அளவீட்டு விண்ணப்பங்களை நில அளவீட்டு திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். இத்துடன் அனுப்பப்படும் விண்ணப்பத்தின் உள்ளடக்கப்படும் கரைவலைப்பாடு மற்றும் துறைகளின் அளவீட்டு விண்ணப்பத்தின் பிரதி ஒன்று கடற்தொழில் பணிப்பாளர் நாயகம் மாவட்ட கடற்தொழில் திணைக்களம் பிரதேச செயலாளர் இவர்களுக்கும் அனுப்பி வைப்பதுடன் காணி மற்றும் காலணி அபிவிருத்தி அமைச்சினால் இணக்கம் தெரிவிக்கப்பட்ட கடிதத்தின் பிரதியும் இணைக்கப்பட வேண்டும் என பணிப்பாளர் நாயகம் எஸ்.ஜே.கஹவத்த தெரிவித்துள்ளார்.






# கட்டணத்தை உயர்த்தியமைக்கு ஆசிரிய சேவை சங்கம் கடுமையான எதிர்ப்பு



தேசியக் கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படுகின்ற கல்வி மானிப் பாடநெறியின் (**Bachelor of Education (special) Degree (science) (Bs22/2022)** மூன்று வருடங்கள் மட்டுப்படுத்தப்பட்ட பாடநெறியில் இதுவரை நடைபெற்ற முழுமையான பாடநெறிக் கட்டணமாக 84000 ரூபாயிலிருந்து 152000 வரை அறவிடப்பட்டது. அதை மேலும் 68000 ரூபாய் வரையான வித்தியாசத்தில் உயர்த்துவது தொடர்பாக இலங்கை ஆசிரிய சேவை சங்கம் கடுமையான எதிர்ப்பினை கல்வி அமைச்சருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக சங்கத்தின் உப தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் அவர்கள் தெரிவித்துள்ளார்.

02) விசேடமாக தேசியக் கல்வி நிறுவகத்துக்கு ஊடாக கல்வியற் கல்லூரிகளை அறிமுகப்படுத்தியதின் பின்னர் அந்த உறுப்புரையில் குறிப்பிடப் படுவதன்படி வதிவிடத்தில் மூன்றுவருடங்கள் கல்வியற் கல்லாரிகளில் ஆசிரியப் பயிலுனர்களுக்கு வழங்கப்படுகின்ற டிப்ளோமா பாடநெறியை அதே காலப்பகுதாயினுள் கல்வி மானி விசேட பட்டதாரி பாடநெறி வரை அபிவிருத்தி செய்யும்படி அவ்வப்போது ஆட்சிபீடம் ஏற்றப்பட்ட அரசாங்கங்களால் பொய்யான உறுதி மொழிகளை வழங்கின ஆனால் தேசியக் கல்வி நிறுவகத்தை நேரடியாக வருமானத்தைப் பெறும் ஒரு வழியாகக் கொண்டுள்ளன.அரசாங்கமானது வருடாந்த வரவு செலவுத் திட்டத்தினூடாக இதற்காக வழங்க வேண்டிய ஒதுக்கீடுகளுக்களை வழங்காமல் இலவசக் கல்விச் சட்ட மூலத்துக்கும், ஆசிரியர்களின் மனப்பாங்கு விருத்திக்கும் கேடு விளைவிக்கின்ற செயலைச் செய்கின்றமை பாரதூரமான விடயமாகும்.

03)வகுப்பறையில் 43 இலெச்சம் மாணவர்களின் கல்வியில் பிரதான பொறுப்பினை வகிப்போர் ஆசிரியர்களேயன்றி வேறெவரும் இல்லை என்பதோடு அவர்கள் கற்கின்ற பாட விதானங்களைத் தயாரித்துக் கற்பித்தல் தேர்ச்சியினை ஏற்படுத்தி மிகவும் திறமையான ஆசிரியர்களை வகுப்பறைக்குள் அனுப்புவதும் அவர்களுக்கு உரிய வேதனத்தைப் பெற்றுக் கொடுப்பதும் அரசாங்கத்தின் நேரடிப் பொறுப்பாகும். அதற்கமைய அது தொடர்பாக விசேடமாக அவதானத் செலுத்தி இந்த வருட வரவு செலவுத் திட்டத்தினூடாக உரிய ஒதுக்கீட்டை ஒதுக்கி நடைமுறையில் உள்ள கட்டணத்துக்கு அமைவாக பாடநெறியை முன்னெடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு எமது சங்கமானது மிகுந்த தேவைப்பாட்டுடன் கேட்டு நிற்பதாக உப தலைவர் பிரதீப் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# மலையக இலக்கியத்தின் மகுடம்

# தெளிவத்தை ஜோசப் எனும் தமிழ் முதுசம்

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

தமிழ் உலகம் அறியும் எழுத்தாளராக உலா வந்த தெளிவத்தை ஜோசப், தனது இயற்பெயருடன், தான் பிறந்து வாழ்ந்த மண்ணையும் கௌரவிக்கும் முகமாக மலையகத்தின் தெளிவத்தையை இடப்பெயரையும் இணைத்து மண்ணின் பெருமையை மேலும் மெருகூட்டியுள்ளார். எழுத்தையே உயிர் மூச்சாக சுவாசித்த மலையகத்தின் மூத்த எழுத்தாளர் "தெளிவத்தை ஜோசப்" 21ஃ10ஃ2022 அன்று காலை சிந்திப்பதை நிறுத்திக் கொண்டார். மலையகத் தோட்டப்புற வாழ்வியலின் அழகியலைச் சிறுகதைகளாக வடித்து, அந்த வாழ்வியல் அனுபவங்களைத் தனதுபடைப்புகள் மூலம் கொண்டு வந்து பிரதேசம் கடந்தும் சிறந்த படைப்பாளியாகக் கருதப்படுபவர் ஜோசப்.



பலராலும் அறியப்படும் படைப்பாளியாக மாறிய தெளிவத்தை ஜோசப் 1960-களில் தமிழ் இலக்கியத் துறையில் தடம் பதித்தார். ஆரம்பத்தில் சிறுகதைகள் எழுதினார். பிறகு குறுநாவல், நாவல், விமர்சனம், ஆய்வுக் கட்டுரைகள், தொலைக்காட்சி, வானொலி நாடகம், திரைப்படக் கதை எனப் பல தளங்களில் தடம் பதித்தார். அவர் ஒரு பிரபல எழுத்தாளராக இருந்தாலும் ஏனைய படைப்பாளர்களின் படைப்புகளையும் வெளிக்கொணர்வதிலும் தமது பங்களிப்பை வழங்கி வந்தார். வளர்ந்து வரும் எழுத்தாளர்கள் முதல், உறுதியான தடத்தைப் பதித்துக்கொண்டவர்கள் வரை அனைவரையும் வெளி உலகிற்குக் கொண்டு வருவதற்குத் உறுதுணையாக இருந்தார். அவரது இலக்கிய படைப்புகள் மூலம் மலையக எல்லையைக் கடந்து உலக அளவில் பேசப்படும் ஈழத்தின் முக்கியப் படைப்பாளியாகத் திகழ்ந்தார். பல்வேறு பத்திரிகைகளுக்காக பல புனைப்பெயர்களில் இலக்கிய கட்டுரைகள், இலக்கிய குறிப்புகள், சிறுகதைகள், கவிதைகள், இலக்கியத் தகவல்களை எழுதியுள்ளார். மலையகம் பற்றி அறியவேண்டும் என்றால், இவரது படைப்புகளைப் படித்தால் போதும் என்கிற அளவுக்கு அந்த மக்களின் சமூக, அரசியல், பொருளாதார நிலவரங்களை இவரது படைப்புகளே சாட்சியமாகும்.

இலங்கையில் தயாரிக்கப்பட்ட புதிய காற்று திரைப்படத்திற்கும் தொலைக்காட்சி நாடகமொன்றுக்குத் திரைக்கதை, வசனம் எழுதியுள்ள தெளிவத்தை ஜோசப் இதுவரை ஆறு நாவல்களையும், மூன்று சிறுகதை தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார். மலையகத்தில் முகிழ் கொண்டு, மண்ணின் மகுடமான தெளிவத்தை ஜோசப் நாமிருக்கும் நாடே சிறுகதைத் தொகுதிக்காக இலங்கைச் சாகித்திய விருது பெற்றுள்ளார். இவரது குடை நிழல் என்ற புதின நூல் 2010 ஆம் ஆண்டுக்கான யாழ் இலக்கிய வட்டம் – இலங்கை இலக்கியப் பேரவை விருதைப் பெற்றுள்ளது. காலங்கள் சாவதில்லை' என்பது இவரது முக்கியமான நாவல். அவரது ஆய்வு நூல்களான '20-ம் நூற்றாண்டில் ஈழத்து இதழியல் வரலாறு', 'மலையக சிறுகதை வரலாறு' ஆகியவை இவரைச் சிறந்த ஆய்வாளராக உலகிற்கு பறைசாற்றுகிறது.

மலையகத்தின் மூத்த எழுத்தாளராகத் திகழ்ந்த இவர் நீண்டகாலமாக தமிழ் இலக்கிய மேம்பாட்டுக்காக பல்வேறு முனைப்புகளை மேற்கொண்டார். மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் தலைவராகவும் பணியாற்றிய எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் மத்திய, மாகாண அரசுகளின் பல விருதுகளுக்குச் சொந்தக்காரர். ஊவா மாகாண சாகித்திய விருது, இந்து கலாசார திணைக்களத்தின் இலக்கிய செம்மல் விருது, அரசின் கலாபூசண விருது, தேசிய சாகித்திய விருது, பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் ஒன்றியத்தின் விசேட விருது, கம்பன் கழக விருது, யாழ் இலக்கிய வட்டத்தின் விருது, மட்டக்களப்பு இலக்கிய மன்றத்தின் விருது, மத்திய மாகாண சாகித்திய விருது, மேல் மாகாண சாகித்திய விருது, கொடகே வாழ்நாள் சாதனையாளர் விருது, விஷ்ணுபுரம் இலக்கிய விருது உள்ளிட்ட பல விருதுகள் அவருக்கு கிடைத்துள்ளன. மலையகத்தின் வற்றாத இலக்கிய பிரவாகமாக பரிணமித்த இவர் தனது இலக்கியப் பயணத்தில் 66 சிறுகதைகள் உட்பட ஏராளமான படைப்புகளை வழங்கியுள்ளார். சென்னை இலக்கிய மாநாடு, கனடா புத்தகக் கண்காட்சி, அவுஸ்திரேலியா, பிரித்தானியா நாடுகள் உள்ளிட்டவற்றில் பேச்சாளராகவும் கலந்துகொண்டு மலையக இலக்கியத்திற்கு பெருமை சேர்த்தவர்.

இலக்கிய உலகில் தனித்துவம் மிகுந்த எழுத்தாளர் என்ற பெருமையுடன் வலம் வந்த அவர் பல பத்திரிகைகள், இலக்கிய அமைப்புகள் நடத்திய குறுநாவல், சிறுகதைப் போட்டிகளில் பரிசு வென்று, வாழ்நாள் சாதனையாளர் விருது உட்பட ஏராளமான விருதுகளை பெற்றுள்ளார். மலையக இலக்கியம் வளர்ச்சியடைவதற்கு தெளிவத்தை ஜோசப்பின் பங்களிப்பு இன்றியமையாதது என்றால் மிகையில்லை. மலையகத்தில் முகிழ் கொண்டு, மண்ணின் மகுடமான தெளிவத்தை ஜோசப் அவர்களுக்கு அஞ்சலிகளுடன்

# புனித கபில்வத்தைக்கான பன்னிரண்டாவது புனித யாத்திரை



**(காரைதீவு சகா)**

ஆதி கதிர்காமம் என்று அழைக்கப்படும் கபில்வத்தைக்கான புனித யாத்திரை இன்று(21) வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமானது. சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜி தலைமையிலான 26 பேர் கொண்ட குழுவினர் இந்த யாத்திரையில் ஈடுபட்டனர் . சித்தர்கள் குழு அமைப்பின் தலைவர் ஆதித்தன் உப தலைவர் மனோகரன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் மொனராகலை யிலிருந்து இந்த யாத்திரிகர்கள் குழு புறப்பட்டது . அடர்ந்த காட்டுப் பகுதியில் பத்து மணித்தியாலங்கள் பயணித்த பின்பு குழுவினர் கவில்வத்தையை நேற்று சென்றடைந்தனர். முன்னதாக அதிகாலை 2 மணியளவில் கோரக்கர் சித்தர் ஆலயத்தில் விசேட யாகம் நடாத்தப்பட்டு அனைவருக்கும் காப்பு கட்டப்பட்டது.



மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட மகிழடித்தீவு சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் தின விழா நிகழ்ச்சி அண்மையில் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற போது......

# படைப்பாளர்கள் நூல் அறிமுக விழா







பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய

சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் படைப்பாளர்கள்நூல்அறிமுகவிழாஎதிர்வரும் 23.10.2022ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முனைக்காடு உக்டா பண்ணையில் நடைபெறவுள்ளது. ஒன்றியத்தின் தலைவரும், கிழக்குப்பல்கலைக்கழக விரிவுரையாளருமான கவிஞர்.த.மேரா தலைமையில் நடைபெற உள்ள இந்நிகழ்ச்சியில் பிரதம அதிதியாக பேராசிரியர் சி.சந்திரசேகரம், சிறப்பு உரைஞராக பேராசிரியர் செ.யோகராசா உள்ளிட்ட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# சம்பளத்தை முன்கூட்டியே வழங்குமாறு கோரிக்கை

**தலவாக்கலை பி.கேதீஸ்**



எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு இம்மாதத்திற்கு வழங்கப்பட வேண்டிய சம்பளத்தை முன்கூட்டியே வழங்குமாறு முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் கணபதி கனகராஜ் மத்திய மாகாண பிரதான செயலாளர் காமினி ராஜரத்தினவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். கடந்த காலங்களில் சம்பளத் தினத்துக்கு முன்பதாக பண்டிகை காலங்கள் வருமாயின் முன்கூட்டியே சம்பளம் வழங்கும் நடைமுறை இருந்து வந்திருக்கிறது. தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் சுகாதாரத் துறை உள்ளிட்ட சகல தரப்பினரும் பிரச்சனைகளை எதிர்நோக்குவதால் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் முன்கூட்டியே வழங்கப்படுமாயின் தீபாவளியை பண்டிகை கொண்டாடுவதற்கு அது கை கொடுப்பதாக அமையும் என்பதால் சம்பளம் வழங்குவதற்கு ஆவணம் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.இது தொடர்பில் உடனடியாக ஆவணம் செய்யப்படும் என மத்திய மாகாண பிரதான செயலாளர் மற்றும் மத்திய மாகாண சுகாதார பணிப்பாளரும் தன்னிடம் தெரிவித்ததாக கணபதி கனகராஜ் மேலும் தெரிவித்துள்ளார்.

# "அடையாளம்" சஞ்சிகை வெளியீட்டு நிகழ்ச்சி

**ஹஸ்பர்[6]**



"அடையாளம்" எனும் கையெழுத்து சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று வெள்ளிக் கிழமை (21) முள்ளிப்பொத்தானை பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தின் தரம் **09A** மாணவர்களினால் வெளியீட்டு வைக்கப் பட்டது. தரம் – 09யு வகுப்பாசிரியர் எச்.எம்.ஹனீஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலை முதல்வர் ஏ.எப்.லரீப், பிரதி அதிபர் எம்.எம்.கே.பாத்திமா மற்றும் நூலக பொறுப்பாசிரியர் எஸ்.ஏ.றம்ஸி ஆகியோர் உட்பட ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர். "அடையாளம்" எனும் கையெழுத்து சஞ்சிகையில் தரம் – 09யு மாணவிகளின் கவிதைகள், கட்டுரை, சிறுகதை, கிராமத்தின் வரலாறு, பொது அறிவு தகவல்கள், அறபு எழுத்தணிகள் மற்றும் ஓவியங்கள் என பல ஆக்கங்களை அவர்களது சொந்தக் கையெழுத்தில் எழுதியுள்ளனர்.